பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 12 2024 **THURSDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இங்கிலாந்து இடையே பருவநிலை மாற்றம், காமன்வெல்த் உள்ளிட்டவற்றில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு மன்னருடன் ஆலோசனை நடத்தியதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு நிலவரம் குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

3. நாடாளுமன்ற மாண்புகளை குறைக்கும் வகையில் காங்கிரஸ் செயல்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மாநிலங்களவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஸ் நிராகரித்துள்ளார்.

5. வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய பேட் செய்து வருகிறது.

>>>>><<<<<

இந்தியா - இங்கிலாந்து இடையே பருவநிலை மாற்றம், காமன்வெல்த் உள்ளிட்டவற்றில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு மன்னர் மூன்றாம் சார்லஸுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து, சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொலைபேசியில் இங்கிலாந்து மன்னருடான உரையாடலின் போது இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை வலுப்படுத்த உறுதிபூண்டதாக தெரிவித்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையே பரஸ்பர நலன்களை அளிக்கக்கூடிய பல்வேறு விஷயங்கள் குறித்து அந்நாட்டு மன்னருடன் தாம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாகவும் பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பாதுகாப்பு நிலவரம் தொடர்பான உயர்நிலைக் குழுக் கூட்டம் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

ஜம்மு காஷ்மீரின் தற்போதைய பாதுகாப்பு தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன், ராணுவ தலைமைத்தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, தேசிய புலனாய்வு அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. சதானந்த் டேட் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

உலக அளவில் நவீன போர் முறைகள் வேகமாக மாறிவரும் சூழலில், உயர்நிலை தொழில்நுட்பத்தை பொறியாளர்களும், விஞ்ஞானிகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தின் தேசிய பொறியியல் அகாடமியின் ஆண்டு மாநாட்டை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பொறியியல் துறையில் ஏற்பட்டுவரும் தொழில்நுட்ப மாற்றங்களின் தாக்கம் அனைத்துத்துறைகளிலும் எதிரொலிக்கும் என்று அவர் கூறினார்.

மத்திய அரசின் நடவடிக்கைகளால் உலக அளவில் வளர்ந்துவரும் சூழலுக்கு ஏற்ப முன்எப்போதும் இல்லாத வகையில் சுயசார்பை நோக்கி பாதுகாப்புத்துறை முன்னேறியுள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடாளுமன்றத்தின் மாண்புகளை குறைக்கும் வகையில் காங்கிரஸ் செயல்படுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்றத்தில் அரசியல் சாசனம் குறித்த விவாதத்தின்போது காங்கிரஸ் கட்சியின் உண்மையான வரலாறு வெளிவந்துள்ளதாக கூறினார்.

அம்பேத்கருக்கு எதிராக காங்கிரஸ் கட்சி எப்போதும் செயல்பட்டு வந்திருப்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் குறை கூறினார்.

>>>>><<<<<

நாட்டின் தொலைதூர பகுதிகளிலும் சாலை கட்டமைப்பை வலுப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், எல்லைப்பகுதி மாநிலமான அருணாச்சலப்பிரதேசத்தில் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 398 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

வடகிழக்கு மாநில மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நாட்டின் எல்லையோர மாநிலங்களுக்கும், சாலை இணைப்பை மேம்படுத்தவும் அரசு கட்டமைப்பு திட்டங்களில் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஆயிரத்து 338 கோடி ரூபாய் மதிப்பிலான நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நிதின் கட்கரி அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மக்களவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த திரு. நிதின் கட்கரி, பசுமை நெடுஞ்சாலை அமைப்பதற்காக 62 ஆயிரம் கிலோமீட்டரில் மரம் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பசுமைத் திட்டப் பணிகளின் மூலம், ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாநிலங்களவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஸ் நிராகரித்துள்ளார்.

திரு. ஜெக்தீப் தங்கர் ஒருதலைபட்சமாக செயல்படுவதாக கூறி, அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 60 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, நம்பிக்கையில்லா தீர்மானத்தை அவையில் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், இன்று அதனை தள்ளுபடி செய்து உரையாற்றிய திரு. ஹரிவன்ஸ், குடியரசு துணைத்தலைவரின் புகழை குறைக்கும் வகையில், அவருக்கு எதிராக அவசர கதியில் எதிர்க்கட்சிகள் இந்த தீர்மானத்தை தாக்கல் செய்தது ஏற்புடையதல்ல என்று தெரிவித்தார்.

அரசியல் சட்ட அமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாக திரு. ஹரிவன்ஸ் கூறினார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும், 60 வயதான கலைஞர்கள் மற்றும் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை மத்திய கலாச்சாரத்துறை தொடங்கியிருப்பதாக அத்துறைக்கான திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், ஆண்டு வருமானம் 72 ஆயிரத்திற்கும் குறைவான கலைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஆறாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்க வகை செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

பல்வேறு பிரத்யேக கலைகள் மற்றும் கலாச்சார துறைகளில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய கலைஞர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட கலைஞர்கள் உயிரிழக்க நேரிட்டால், அவர்களின் வாரிசுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும் என்றும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறினார்.

**>>>>><<<<<**

நாட்டில் மருத்துவ சாதன உற்பத்தித்தொழில் அபார வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பு உருவாகியிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சுகாதாரத்துறை தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், நாட்டில் அதிகரித்துவரும் சுகாதார தேவைகள் மற்றும் சந்தை வாய்ப்புகளுக்கு ஏற்ப சுகாதாரத்துறை விரைவான வளர்ச்சியை நோக்கி முன்னேறி வருவதாக கூறினார்.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தித்துறை 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வளர்ச்சியடையும் என்றும் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

நவீன நகரங்கள் அமைக்கும் திட்டம், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. **Tokhan Sahu** தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த நவீன நகரங்கள் திட்டத்திற்காக மத்திய அரசு, 48 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 94 சதவீத நிதியை விடுவித்திருப்பதாக கூறினார்.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கோரிக்கையை ஏற்று இந்த திட்டம் நடப்பு நிதியாண்டின் இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று திரு. **Tokhan Sahu** தெரிவித்தார்.

**>>>>><<<<<**

வெங்காயத்திற்கான 20 சதவீத ஏற்றுமதி வரியை மத்திய அரசு உடனடியாக ரத்துசெய்ய வேண்டும் என்று மஹாராஷ்ட்ரா மாநில துணை முதலமைச்சர் திரு. அஜித் பவார் கேட்டுக் கொண்டுள்ளார்.

மஹாராஷ்ட்ராவில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய இந்த அறிவிப்பை விரைவில் வெளியிட வேண்டும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**>>>>><<<<<**

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பந்து வீச தீர்மானித்துள்ளது.

இதையடுத்து பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 4.2 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 42 ரன் எடுத்துள்ளது.

முன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

**>>>>><<<<<**

மும்பை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 11-3, 11-8, 8-11, 8-11, 12-10 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Tanvi Khanna** –வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Rahul Baitha** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-3, 11-8, 11-7 என்ற செட் கணக்கில், இலங்கையின் **Nilakshana Herath** –ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Abhishek Pradhan** -னும் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

>>>>><<<<<

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – **Prarthana Thombare** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 6-1 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Smriti Bhasin – Sravya Shivani Chilakalapudi** இணையை வென்றது

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Riya Bhatia – Zeel Desai** இணையும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

ஆசிய மகளிர் **Roll Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

கோவாவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா 3-2 என்ற கோல்கணக்கில் ஈரானை வென்றது.

>>>>><<<<<

ஆசிய கோப்பை கடற்கரை கால்பந்து போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா இடம்பெற்றுள்ள பிரிவில் தாய்லாந்து, குவைத் மற்றும் லெபனான் அணிகள் இடம்பெற்றுள்ளன.

இப்போட்டி, தாய்லாந்தில் மார்ச் மாதம் 20-ஆம் தேதி தொடங்கி, 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டி, பாகிஸ்தான் மற்றும் பங்கேற்கும் நாடுகள் ஏற்றுக்கொள்ளும் மற்றொரு நாட்டில் நடைபெறும் என்று ஐசிசி அறிவித்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் இடையேயான போட்டிகள், வேறொரு நாட்டில் நடைபெறும் என்றும் ஐசிசி கூறியுள்ளது.

இந்த நடைமுறை 2027ஆம் ஆண்டுவரை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>END<<<<<